# தொழில் தொடங்குதற்கான உங்கள் வழிகாட்டி

The Law Society

## ஆலோசனை பெறுங்கள்

ஒரு தொழிலைத் தொடங்குவது என்பது மகிழ்வும் உற்சாகமும் அளிக்கக்கூடிய விஷயமாக இருக்கும். ஆனால் ஒழுங்கான ஆலோசனைகள் இல்லாமல் கால்பதித்தால் – அதிலும் குறிப்பாக சட்ட விவகாரங்களைப் பொறுத்தமட்டில் – ஆபத்தாகவும் முடியலாம். பெரும்பாலான சமயங்களில் பிரச்சினை ஆரம்பமாகி மோசமான நெருக்கடி நிலையை அடைந்த பிறகுதான் பலர் சட்டத்தரணியின் உதவியை நாடுகிறார்கள். ஆனால் அந்த நேரத்தில், பிரச்சினைக்கு தீர்வு ஒன்று இருந்தாலும்கூட அது அதிகம் செலவுசெய்தால்தான் கிடைக்கும். ஒரு சின்ன காரியத்தைச் செய்து பிரச்சினையையே தவிர்த்திருக்கலாம் என்ற நிலை அப்போது இருக்காது.

வந்தபின் சிகிச்சை அளிப்பதை விட வருமுன் காப்பதே சாலச் சிறந்தது. ஆரம்பத்திலேயே சட்ட ஆலோசனையைப் பெறுவது என்பது நெருக்கடிகளைத் தவிர்க்க இடம்கொடுக்கும். என்னென்ன பிரச்சினைகள் வரலாம் என்று கண்டறிந்து அதைத் தவிர்க்க என்னென்ன செய்யலாம் என்று ஆலோசனை வழங்கி சட்டத்தரணியால் உங்களுக்கு உதவ முடியும். அதனால் பிரச்சினைகளிலிருந்து உங்கள் தொழில் காப்பாற்றப்பட்டு, உங்களது பணம் விரயமாவது தவிர்க்கப்படும்.

## சட்டத்தரணியைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் பயன்படுத்துதல்

உங்களது தேவைகளுக்கேற்ற தகவல் அறிவும் அனுபவமும் கொண்ட சட்டத்தரணியை நீங்கள் தேர்வுசெய்வதென்பது முக்கியம். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களுக்கு தொழில் சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசனை வழங்குவதற்கென்று வடிவமைக்கப்பட்டது உங்கள் தொழிலுக்கான சட்டத்தரணிகள் திட்டம். ஆரம்பத்தில் இலவச கலந்தாலோசனை வழங்குதலும் இதில் உண்டு. இத்திட்டத்தில் உறுப்பினர்களாய் இருக்கக்கூடிய சட்டத்தரணிகள் உங்கள் வட்டாரத்தில் யார் யார் என்று தெரிவிக்கும் ஒரு பட்டியலைப் பெற 020 7405 9075 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும் அல்லது www.lawsociety.org.uk/lfyb என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

மாறாக எமது இணையதளத்தை www.lawsociety.org.uk/findasolicitor என்ற முகவரியில் பார்க்கவும் அல்லது 0870 606 2555 என்ற இலக்கத்தை அழைக்கவும்.

## சட்ட ஆலோசனை பெறுவதற்கு தேவையான விஷயங்கள்

புதிதாகத் தொடங்கப்படும் தொழில்கள் எதிர்கொள்ளக்கூடிய பொதுவான பிரச்சினைகள் அனைத்திற்கும் சட்டத்தரணிகளால் ஆலோசனை வழங்கமுடியும். அப்பிரச்சினைகளுக்கான பல்வேறு தீர்வுகளையும் அவர்கள் உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்க முடியும். உங்களுக்கு எவ்வகையான உதவி வழங்குவது என்று அவர்கள் தீர்மானிப்பதற்கு, அவர்கள் உங்களது தொழில் தொடர்பாக நிறைய கேள்விகளைக் கேட்பார்கள். பின்வரும் விஷயங்கள் பற்றியதாக அக்கேள்விகள் அமைந்திருக்கும்.

### தொழில் நிறுவனத்தின் கட்டமைப்பு

ஒரு தொழிலைப் புதிதாகத் தொடங்கி விரிவுபடுத்துகின்ற நேரத்தில் அது வெற்றிபெறுவதற்கு, தொழிலின் கட்டமைப்பும் வடிவமைப்பும் இன்றியமையாததாகும். நீங்கள் உங்கள் பெயரிலேயோ அல்லது ஒரு நிறுவனத்தை உருவாக்கியோ தொழில் தொடங்கலாம். மற்றவர்களுடன் சேர்ந்து நீங்கள் தொழில் தொடங்குகிறீர்கள் என்றால், உங்களுடைய பங்களிப்புக்கு ஏற்ற நியாயமான வருவாய் கிடைக்க வேண்டும் என்பதை நீங்கள் உறுதிசெய்துகொள்வது அவசியம். ஆதலால் பங்குதாரர் ஒப்பந்தமோ அல்லது கூட்டுத்தொழில் ஒப்பந்தமோ உங்களுக்குத் தேவைப்படலாம். இருக்கக்கூடிய பல்வேறு வழிமுறைகளை விளக்கி, உங்களது தொழிலுக்கு எது சிறந்தது – கூட்டுத்தொழிலா, லிமிடென் நிறுவனமா, லிமெடெட் லையபிலிடி நிறுவனமா - என்று சட்டத்தரணி ஆலோசனை கூறமுடியும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வகையில் அவர் ஏற்பாடுகளைச் செய்யமுடியும்.

### தொழிலுக்கான இடம்

உங்கள் தொழிலுக்கான ஒரு இடத்தை தெரிவுசெய்யும்போது அவ்விடத்தின் குத்தகை நிபந்தனைகள் பற்றி நீங்கள் முழுமையாகத் புரிந்துகொள்வது முக்கியம். இடத்தின் உரிமையாளரால் வாடகையைக் அதிகரிக்க முடியுமா? அப்படியானால் எந்த அளவில் அதிகரிக்க முடியும்? அவ்விடத்தின் இதர சேவைகளுக்கான கட்டணம் அதிகரித்துக்கொண்டே போகுமா? இடத்தின் பயன்பாட்டை நீங்கள் மாற்றுகிறீர்கள் என்றால் அதற்கு ஒப்புதல் பெறவேண்டுமா? வீட்டிலிருந்தே தொழிலை நடத்த நீங்கள் முடிவுசெய்தால், அதிலுள்ள கட்டுப்பாடுகள் என்னென்ன? போன்ற கேள்விகள் அனைத்துக்குமாக சட்டத்தரணியால் உங்களுக்கு உதவமுடியும்.

### நிதி

தொழிலுக்கான நிதி திரட்டுவதில் என்னென்ன வழிமுறைகள் இருக்கின்றன, அவை பற்றிய சட்ட விவகாரங்கள் என்னென்ன என்று அறிந்துகொள்ள நீங்கள் விரும்பலாம். உங்களுடைய வீட்டை அடகுவைக்க வேண்டுமா? கடன்கொடுத்தவர்கள் நியாயமற்ற நிபந்தனைகளை விதிக்கிறார்களா? உங்களது வங்கியிலிருந்து மேம்பட்ட ஒரு ஏற்பாட்டை செய்துகொள்ள முடியுமா? போன்ற விஷயங்கள் தொடர்பாக உங்களுக்கு விளக்கம் அளிக்கவும், கடன் வழங்குவோரிடம் உங்கள் சார்பாக பேரம் பேசவும் சட்டத்தரணியால் முடியும்.

### வரிகள்

உங்கள் தொழில் செலுத்தக்கூடிய வரிகளைக் குறைப்பது எப்படி, உங்கள் தொழிலுக்கான நிதி ஆண்டைத் தொடங்குவதற்கான சரியான நேரம் எது என்பது பற்றி சட்டத்தரணியால் ஆலோசனை வழங்கமுடியும்.

### காப்பீடு

இடம், தொழிலாளர்கள், உபகரணங்கள், பொருட்கள், பார்வையாளர்கள் என்று பல வகையிலும் தொழிலில் நஷ்ட வாய்ப்புகள் ஏற்படலாம். உதாரணத்துக்கு, நீங்கள் தயாரிக்கும் பொருளினாலோ அல்லது உங்கள் ஊழியராலோ யாராவது காயமடைந்தால் என்ன செய்வது? உங்களுக்காக வேலைபார்த்துக்கொண்டிருக்கையில் ஒருவர் காயமடைந்துவிட்டால் என்னாகும்? வேலையில் இருந்தபடி ஒரு ஊழியர் இணையத்தை தவறுதலாகப் பயன்படுத்தினால் அதற்கு நீங்கள்தான் சட்டப்படி பொறுப்பேற்க வேண்டும் என்றால் என்ன செய்வது? நீங்கள் காப்பீடு செய்துகொள்ள வேண்டிய நஷ்ட வாய்ப்புகள் ஆபத்துகள் குறித்து சட்டத்தரணியால் சுயாதீனமான ஆலோசனைகளை வழங்கமுடியும்.

### பணப்புழக்கம்

எந்த ஒரு தொழிலுக்கும் பணப்புழக்கம்தான் உயிரோட்டம் போன்றது. திருப்பிக்கொடுக்க முடியாத கடன்களில் நீங்கள் சிக்கிக்கொள்ளாதவாறு சரியான நிபந்தனைகளுடன் நீங்கள் வர்த்தகம் செய்வதில் சட்டத்தரணி உதவமுடியும். கொடுத்த கடனை வசூலிப்பது தொடர்பிலும் அவர் உங்களுக்கு ஆலோசனை வழங்கமுடியும்.

### பொருட்கள் மற்றும் சேவைகள்

பொருட்கள் மற்றும் சேவைகளை நீங்கள் விற்கவோ வாங்கவோ செய்யும்போது உங்களுக்கு இருக்கக்கூடிய சட்டபூர்வ கடப்பாடுகளை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். சட்டம் விதிக்கும் ஒப்பந்த நிபந்தனைகள் என்னென்ன? பொருட்களின் தன்மைக்கு பொறுப்பேற்பது குறித்து சட்டம் என்ன சொல்கிறது? விளம்பரங்களில் சட்டப்படி நிங்கள் சொல்லக்கூடிய விஷயங்கள் யாவை? இந்த விஷயங்கள் தொடர்பாக உங்களுக்கு விரிவாக விளக்கமளிக்க சட்டத்தரணியால் முடியும். தேவைப்படும் பட்சத்தில் உங்களை ஒரு நிபுணரிடமும் அவர் அனுப்பிவைக்கலாம்.

### உங்களது தொழில் சிந்தனைகளைப் பாதுகாத்தல்

உங்களது வர்த்தகப் பெயரையோ, சின்னத்தையோ அல்லது உற்பத்திப் பொருட்களையோகூட முறைகேடாகப் பயன்படுத்தி, உங்களது தொழில் சிந்தனைகளை திருட விரும்பும் தொழில் போட்டியாளர்களிடம் இருந்து உங்களது வடிவமைப்புகளைப் பாதுகாப்பதில் சட்டத்தரணி உதவ இயலும்.

### மற்றவரின் தொழில் வடிவங்களை வாங்குதல்

ஆயத்தமாகவுள்ள தொழில்களை வாங்கி நடத்துதல் என்பது நல்ல யோசனையாகத் தோன்றினாலும், அதனோடு வருகின்ற முந்தையச் சுமைகள் அல்லது விற்பனை ஒப்பந்தத்தில் பொடி எழுத்துகளில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் குறித்து என்ன செய்வது.? பல நேரங்களில், அதிக விலைகொண்ட பொருட்களை வாங்கி தொழில் நடத்தும்போது, தொழில் வடிவமைப்பாளரிடம் இருந்து எவ்வித உதவியும் கிடைக்காத ஒரு நிலையில், குழியில் விழுந்து தவிக்கும்படியாகும். நீங்கள் எதிர்பார்த்த அளவில் ஆயத்த தொழில் வடிவங்கள் அமையவில்லை என்றால் என்ன செய்ய வேண்டும்? உங்களது பணம் திரும்பக் கிடைக்குமா? ஆயத்த தொழில் வடிவங்களை வாங்கி நடத்துவதில் பொதுவாக ஏற்படும் பிரச்சினைகள் குறித்து சட்டத்தரணியால் உங்களுக்கு ஆலோசனை வழங்கமுடியும்.

### உரிமங்கள்

வர்த்தகம் செய்ய உங்களுக்கு உரிமம் ஒன்று அவசியமா? உரிமம் தேவையா என்பதை உங்களிடம் எடுத்துக்கூறி, உரிமம் ஒன்றுக்கு நீங்கள் விண்ணப்பிப்பதிலும்கூட சட்டத்தரணியால் உதவமுடியும்.

# தொழில் தொடங்குதற்கான உங்கள் வழிகாட்டி

The Law Society

**பணியமர்த்துதல்**

ஊழியர்களைப் பணியமர்த்துதல் தொடர்பான சட்டங்கள் சிக்கலானவை. அவை தொடர்ந்து மாறியும் வருகின்றன. பணி தொடர்பான கருத்துவேறுபாடுகளும் சிக்கல்களும் ஏற்படுவதற்கு பெரும்பான்மையான காரணம் சட்டத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் ஒழுங்காக உருவாக்கப்படாத வேலை ஒப்பந்தங்களும், பணிநீக்க நடைமுறைகளும்தான். உங்கள் தொழிலில் உள்ள வேலை ஒப்பந்தங்கள், நடைமுறைகள் எவ்வாறு உள்ளன என்பதை சரிபார்த்து மாற்றங்கள் செய்து இவ்வகையான கருத்துவேறுபாடுகள் உருவாவதைத் தடுப்பதில் சட்டத்தரணியால் உதவமுடியும்.

**கருத்துவேறுபாடுகள் மற்றும் பிரச்சினைகள்**

தொழில் நடத்துவது என்பதைப் பொறுத்தவரை எல்லாவற்றுக்கும் முன்பே திட்டமிட்டு தயாராக இருப்பதென்பது பொதுவாக நல்லது. ஒரு பங்காளி அல்லது ஒரு பங்குதாரர் விலகிவிடுகிறார் என்றால் என்னாகும்? பலவந்தமாக உங்களைத் தொழிலிருந்து வெளியேற்ற முடியுமா? பொறுப்புகளும் இலாபமும் நியாயமான வகையில் பகிர்ந்துகொள்ளப்படுவதை எவ்வாறு உறுதிசெய்வது? உங்களது உடல்நலம் பாதிக்கப்படுகிறது என்றாலோ நீங்கள் இறந்துவிடுகிறீர்கள் என்றாலோ உங்கள் தொழில் என்னாகும்? உங்களது வாழ்க்கைத் துணை, வீடு ஆகியவற்றுக்கு ஒழுங்காக காப்பீடு செய்ய முடியுமா? இப்படிப்பட்ட கேள்விகள் அனைத்துக்கும் விளக்கம்தர சட்டத்தரணியால் இயலும்.

## சட்ட கட்டணங்கள்

உங்கள் தொழிலுக்கான சட்டத்தரணி திட்டத்தின் மூலம் நீங்கள் ஒரு சட்டத்தரணியை அணுகுகிறீர்கள் என்றால், அவருடன் உங்களுடைய முதல் சந்திப்பு இலவசம். அதன் பின்னர் கூடுதல் ஆலோசனை வழங்கும்போது அவர் பொதுவாக வாங்கக்கூடியதுபோல மணிக்கணக்கிலோ அல்லது ஒரேதடவையாக குறிப்பிட்ட தொகையையோ கட்டணமாகக் கொடுக்க நேரிடும்.

சட்டத்தரணிகளைப் பொறுத்து கட்டணம் மாறுபடும். பின்வரும் காரணிகளைப் பொறுத்தும் மொத்த கட்டணம் மாறுபடும்:

- உங்களது சூழ்நிலை;
- உங்கள் சட்டத்தரணியின் தகவல் அறிவு மற்றும் அனுபவம்;
- உங்களுக்கு எவ்வகையான ஆலோசனை தேவைப்படுகிறது.

## கூடுதல் தகவல்

தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படக்கூடிய சட்டப் பிரச்சினைகளுக்கு அறிமுக விளக்கம் தரும் நோக்கில், படிப்படியான வழிகாட்டுதல்கள் அடங்கிய தகவல் அட்டைகளை உங்கள் தொழிலுக்கான சட்டத்தரணிகள் திட்டம் உருவாக்கியுள்ளது.

**இந்தத் தகவல் அட்டைகள் பின்வரும் விஷயங்கள் பற்றிப் பேசுகின்றன:**

- வேலைக்கு பணியமர்த்தல் தொடர்பான சட்டங்கள்;
- தொழில் நடத்தும் இடம்;
- வாடிக்கையாளர்கள் மற்றும் பொருள் வழங்குவோருடனான ஒப்பந்தங்கள்;
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விஷயங்கள்;
- நிதி திரட்டுதல்; மற்றும்
- உங்கள் தொழிலைக் கட்டமைப்பது.

**இந்தத் தகவல் அட்டைகளின் நகல்களைப் பெற:**

- 0207 405 9075 என்ற இலக்கத்தைத் தொடர்புகொள்ளவும்;
- www.lawsociety.org.uk/lfyb என்ற இணையதளத்தைப் பார்க்கவும்; அல்லது
- கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்:

  Lawyers For Your Business<br>
  The Law Society<br>
  113 Chancery Lane<br>
  London<br>
  WC2A 1PL.

**பெரிய எழுத்துக்களைக் கொண்டு அச்சடிக்கப்பட்ட வடிவிலும், பார்வையற்றோர் படித்து அறியக்கூடிய பிரெய்லி எழுத்து வடிவிலும், குறுந்தகடு வடிவிலும் இந்த வழிகாட்டி கிடைக்கும். இதில் ஒன்று உங்களுக்கு வேண்டுமென்றால் accessibility@lawsociety.org.uk என்ற மின் -அஞ்சல் முகவரியையோ அல்லது 0870 606 2555 என்ற தொலைபேசி இலக்கத்தையோ தொடர்புகொள்ளவும்.**

**வேறு பல மொழிகளிலும் இந்த வழிகாட்டி கிடைக்கும். www.lawsociety.org.uk என்ற எங்கள் இணைய தளத்திற்குச் சென்று நீங்கள் அவற்றைப் பெறலாம்.**

Lexcel

Look for Lexcel - the mark of excellence




துல்லியமான விபரங்களை வழங்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் நாங்கள் எடுத்துள்ளோம் என்றாலும், சட்டம் என்பது தொடர்ந்தும் மாறிவருகிறது, ஒவ்வொருத்தருக்கும் அது வெவ்வேறு வகையில் பொருந்துகிறது என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். உங்கள் சூழ்நிலைக்கான குறிப்பிட்ட ஆலோசனைக்கு எதுவும் ஈடாகாது. ஆகவே இந்தப் பிரசுரத்தை மட்டும் நீங்கள் சார்ந்திருந்தால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.



Designed by dmlmarketing.co.uk Version 2, 2007 Your guide to setting up a business - Tamil